கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.269/2020

பி.வா.சா. 2 –மரியம்மாள்

நாள். 27.09.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவாச் சொத்து சிறுமலையில் உள்ளது. என் தகப்பனார் தர்மராஜ், 1ம் பிரதிவாதி ஞானப்பிரகாசம் மற்றும் வாதி ஆரோக்கியமேரி ஆகியோர்கள் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்து விட்டார். அவர் 2012ம் வருடம் இறந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 57 இருக்கும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் தகப்பனாருக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் 2ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் பெரியப்பா ஞானப்பிரகாசம் படிக்கவில்லை என்றால் அவர் 4ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல. எழுத, படிக்கத் தெரியும். என் அப்பாதான் தாலுகா அலுவலகத்திற்னுகு சென்று வரி செலுத்துவார். ஞானப்பிரகாசம் மலையிலேயே இருப்பார் என்றால் அவரும் திண்டுக்கல்லுக்கு காய்கறிகள் விற்பதற்காக வந்து போவார். என் அத்தை ஆரோக்கியமேரிக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்று தெரியாது. 1968ம் வருடம் அவருக்கு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. நடந்திருக்கலாம். என் நிரூபண வாக்குமூலத்தில் பாரா எண். 4ல் என் அப்பாதான் வாதி ஆரோக்கியமேரிக்கு நகைகள், சகல சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வாதி ஆரோக்கியமேரிக்கு திருமணமான நேரத்தில் என் அப்பாவிற்கு 15 வயதுதான் இருக்கும் என்றால் சரியல்ல. அதனால் என் அப்பாதான் திருமணத்திற்கு நகைகள் மற்றும் சீர்வரிசைகள் செய்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்திற்கு அருகில் ஞானப்பிரகாசத்திற்கு வேறு சொத்துக்கள் உள்ளன. அதனால் ஞானப்பிரகாசம் தாவாச் சொத்திற்கு வந்து போய்க் கொண்டிருப்பார் என்றும் அவர் வந்ததே இல்லை என்று நான் தவறாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. சிறுமலை மலைப்பிரதேசம் என்பதால் அங்கு தண்ணீர் வசதி இருக்கும். அதன் அருகில் நீரோடைகள் இருக்கும் என்றால் சரிதான். அதனால் பல மைல் தூரம் சென்று தண்ணீர் எடுத்து வந்து தாவா சொத்தை பாசனம் செய்தோம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மழையில்லாத நேரத்தில் நாங்கள் தண்ணீர் கொண்டு வந்து பாசனம் செய்வோம். தாவாச் சொத்து வாங்கப்பட்ட தேதி

**,மாதம், வருடம் தெரியுமா என்றால் தேதி, மாதம் தெரியாது. வருடம் 1975ம் ஆண்டு வாங்கப்பட்டது. தாவாச் சொத்து 24.12.1975ம் தேதியில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதே தேதியில் தாவாச் சொத்து அடமானம் வைக்கப்பட்டதாக சொல்லப்படுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் சாட்சிகளாக 1ம்பிரதிவாதி ஞானப்பிரகாசமும், எனது தகப்பனார் தர்மராஜ் அவர்களும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். 1ம்பிரதிவாதி ஞானப்பிரகாசத்திற்கும் எனது தகப்பனார் தர்மராஜ்க்கும் முறையான பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றால் தெரியாது. தாவாச் சொத்தை தவிர என் பாட்டனார் அந்தோணிக்கு வேறு சொத்துக்கள் உள்ளன என்றால் இல்லை. என் அப்பா அடிக்கடி வருவாய் அலுவலகத்திற்கு சென்று சட்டவிரோதமாக அவரது பெயரில் மட்டும் பட்டா மாற்றிக் கொண்டார் என்றால்சரியல்ல. முறையாக பாகப் பிரிவினையாகாமல் அவர் பெயரில் மட்டும் ஏற்படுத்திக் கொண்ட பட்டா செல்லாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் 2 முதல் 7 பெயரில் மாற்றிக் கொண்ட பட்டா ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஞானப்பிரகாசம் எனது தகப்பனாரை தர்மராஜை மைனராக காட்டி அவரது அப்பா அந்தோணி பெயரில் தாவாச் சொத்தையும் இன்னும் பிற சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் தாத்தா அந்தோணி மற்றும் பாட்டி மோட்சமேரி ஆகியோரை என் தகப்பனார்தான் பராமரித்து வந்தார் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு 60 லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்துள்ளோம் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் வெளிநபர்களால் ஏற்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கு 1ம் பிரதிவாதி ஞானப்பிரகாசம் வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள்தான் பக்கத்து நிலத்துக்காரரிடம் பணம் வாங்கி கொண்டுட பாதையை மறைத்து விட்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஞானப்பிரகாசம்தான் அவரது அப்பா பெயரில் தாவாச் சொத்துக்கள் கிரையம் பெற்றார் என்றும் அதனால் எங்கள் பெயரில் ஏற்பட்ட பட்டா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு திருணம் ஆகி விட்டது. சிறுமலையில் என் தகப்பனார் வீட்டில் குடியிருந்து வருகிறேன். என் கணவரும் அங்குதான் இருக்கிறார். வழக்குரையை படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரையை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்தோணியின் மனைவி பெயர் மோட்சமேரி என்றால் சரிதான். அந்தோணி, மோட்சமேரிக்கு ஞானபிரகாசம், தர்மராஜ், ஆரோக்கியமோரி ஆகிய 3 வாரிசுகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிவாதி அல்போன்ஸ் அமிர்தம்மாள் என்

தாயார். என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புகை அட்டையில் உள்ள காட்டப்படும் கையொப்பம் என்னுடையது இல்லை. நான் கதவு எண்.77, பூண்டி மாதா தெரு, பாரதிபுரம், நாகல்நகர் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக சிறுமலையில் குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாகல்நகர் விலாசத்திகற்கு வந்து அறிவிப்பை பெற்றுக் கொண்டுதான் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் ஞாபகம் இல்லை. வழக்குரையில் கொடுக்கப்பட்டுள்ள எனது விலாசம் என் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் சகோதர, சகோதரிகளுக்கு திருமணம் ஆகி விட்டது என்றால் ஜெர்மனி அம்மாள், சகாயராணி , ஆரோக்கியமேரி ஆகியோருக்கு திருமணம் ஆகி விட்டது. சம்மனச மேரிக்கு திருமணம் ஆகவில்லை. ஜெர்மனி அம்மாளை மேட்டுப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்து அவர்கள் மேட்டுப்பட்டியில் குடியிருக்கிறார்கள் என்றால் பூண்டிமாதா தெருவில் குடியிருக்கிறார். ஆரோக்கியமேரியை வெள்ளோட்டில் திருமணம் செய்து கொடுத்தார்கள். குழந்தைகளுடன் வெள்ளோட்டில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். சகாயராணியை பாரதிபுரம் அண்ணாநகரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவர் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் தாயார் அல்போன்ஸ் அமிர்தம்மாள் என்னுடன் இருக்கிறார் என்றால் சரிதான். என் சகோதர, சகோதரிகள் திருமணமாகி அனைவரும் அவரவர்கள் கணவருடன் பாரதிபுரத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. சிறுமலையில்தான் வசித்து வருகிறார்கள். என் பிறந்த வருடம் 1983 ஆகும். அதனால் 1975ல் தாவாச் சொத்தை அந்தோணி எவ்வாறு கிரையம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1975 ல் என் தாத்தா தாவாச் சொத்து கிரையம் பெறும் போது என் அப்பாவுக்கு 17 வயதும் என் பெரியப்பாவுக்கு 20 வயதும் இருக்கும் என்றால் சரிதான். அதனால் 1975ல் என் அப்பா தாவாச் சொத்தை கிரையம் வாங்குவதற்கு வசதி கிடையாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து கிரையம் வாங்குவதற்கு முன்பு மேற்படி சொத்து எப்படி இருந்தது என்ற விவரம் என்கது நேரடியாக தெரியாது என்றால் என் பாட்டி சொல்லித்தான் தெரியும். தாவாச் சொத்தில் என் தாத்தா அந்தோணியோ, என் பெரியப்பா ஞானப்பிரகாசமோ ஒருநாளும் பாடுபட்டதில்லை, வந்ததில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்களை ஞானப்பிரகாசம், என் அப்பா தர்மராஜ், வாதி ஆரோக்கியமேரி ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதி ஆரோக்கியமேரிக்கு என் தாத்தாதான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. என் அத்தை வாதி ஆரோக்கியமேரியின் திருமணத்தின் போது நான் பிறக்கவில்லை. அதனால் என் அத்தைக்கு யார் சீர்வரிசைகள் செய்தார்கள்

என்பது எனக்கு தெரியாது என்றும் வழக்கிற்காக என் அப்பாதான் செய்தார் என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2011 முதல் 2019 வரை உள்ள வீட்டு வரி இரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வீட்டு 2011,2012 வரை உள்ள வீட்டு வரிஇரசீதில் உள்ள கையொப்பம் என் அப்பாவுடையது என்றால் சரிதான். என் அப்பாவின் இறப்பிற்கு பிறகு என் தாயார் அல்போன்ஸ் அமிர்தம்மாள் வீட்டு வரி செலுத்தி வந்தார். ஈடுகடன் பத்திரத்தில் 100/-க்கு 2 வட்டி வீதம் என் அப்பா செலுத்தி வந்துள்ளார் த என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். நான் அந்த சமயத்தில் பிறக்கவில்லை என்பதால் எனக்கு அந்த விவரம் நேரடியாக தெரியாது என்றால் பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். என் அப்பாவும் சொன்னார். பி.வா..சா.ஆ.2.ல் ரூ.100/-க்கு ரூ.2/- வட்டி என்று எதுவும் எழுதப்படவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல,. பி.வா.சா.ஆ.2ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள இராமலிங்கம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் எனது தகப்பனார், எனது தாத்தா அனைவரும் பாரதிபுரத்தில் இருந்து கொண் தோட்டத்திற்கு மட்டும் அவ்வப்போது சென்று வருவோம் என்றால் சரியல்ல. நான் சிறுமலையில் குடியிருப்பதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அத்தைக்கு 1968 ல் என் தகப்பனார் சொத்துக்கள் வாங்கி கொடுத்தார் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு சொத்தில் ஞானப்பிரகாசம் மற்றும் அவரது மகன் வாழை மற்றும் அவரை விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் ஒரு பகுதி முட்செடிகளால் மூடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா..சா.ஆ.4 பட்டா 2 முதல் 7 பிரதிவாதிகளின் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 பட்டா எங்கள் பெயரில் போலியாக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. அந்தோணியின் வாரிசு சான்றிதழ் கொடுக்காமல் பொய்யான ஆவணங்களக் கொடுத்து எங்கள் பெயரில் பட்டா மாற்றிக் கொண்டோம் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள பட்டாவும் , எங்கள் பெயரில் உள்ள பட்டாவும் இரத்து செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. 50 வருடத்திற்கு முன்பு வாதி தாவாச் சொத்துக்களில் பாகம் வேண்டாம் என ஒதுங்கி விட்டார் என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவாச் சொத்தில் 1/3 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தா அந்தோணி மற்றும் பாட்டி மோட்சமேரிக்கு உணவு, உடை மற்றும் மருத்துவ செலவு ஆகியவை அனைத்து மக்களும் சேர்ந்துததான் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா மட்டுந்தான் செய்தார் என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா 1999ம் வருடம் இறந்தார். அப்போது நான் மைனராக இருந்ததால் அந்த விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் ஆஸ்பெஸ்ட்டாஸ் சீட் போட்டது எந்த வருடம் என்றால் 2000ம் வருடம். என் தாத்தா

இறந்த பின்புதான் ஆஸ்பெஸ்ட்டாஸ் சீட் போடப்பட்டது என்றால் சரிதான். என் அப்பா மட்டுந்தான் வாரிசு என்று பொய்யான தகவலின் பேரில் என் அப்பா வீட்டு வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. நான் பிறநபர்கள் ஆக்கிரமிப்பு செய்ததால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்மனு, புகார் இரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு செய்திருந்தால் தேதி, மாதம் , வருடம் ஆகிய விவரங்கள் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. ஞானப்பிரகாசம், தாவாச் சொத்திற்கு செலவு எதுவும் செய்தாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி தனது பாகத்தை பிரித்துக் கொடுக்கும்படி கேட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்ததற்கு ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்துள்ளோமோ என்றால் தாக்கல் செய்துள்ளோம். தாவாச் சொத்து வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் என் அப்பா தர்மராஜ்க்கு சரிபங்கு உள்ளது என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியபடி பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை -இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN — Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.09.27 18:50:49 +0530

Additional District Judge,

Dindigul.